# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## தர்மதீப நிறுவனம் (கூட்டிணைத்தல்)

**தர்மதீப நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹர்ஷன ராஜகருணா அவர்களால் 2015, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

**[ 24 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009426 -225 (2015/11)

# தர்மதீப நிறுவனம் (கூட்டிணைத்தல்)

## தர்மதீப நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

“தர்மதீப நிறுவனம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அம்மன்றத்தின் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற செயல்படுத்தவும், நிறைவேற்றவும் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

***1***. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தர்மதீப நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

தர்மதீப நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்.

***2***. இச்சட்டம் அமுலாகும் ஆரம்ப திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தர்மதீப நிறுவனத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “ கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “தர்மதீப மன்றம்” என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு

2-PL 009426 -225 (2015/10)

குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் அது பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடைய தாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஸ்ரீலங்கா சமயதீவு என்ற அடிப்படையில் நன்னடத்தையும் ஒழுக்கமும் மிக்க சமூகமொன்றை உருவாக்குவதற்கு கல்வி, சமூக, சுகாதார, பொருளாதார பின்னணி யொன்றை அமைத்தல் ;

(ஆ) புத்தசாசனத்தின் பாதுகாப்பைப் பேணிப் பாதுகாப்பதுடன் சாசன சேவைகளை வழங்குதல் ;

(இ) பல்வேறு செயல்திட்டங்களின் அடிப்படையில் தரும சிந்தனையுள்ள பின்வரும் சேவைகளை வழங்குதல் :-

(i) தரமான கல்வி மேம்பாட்டுக்காக ;

(ii) பொருளாதார அபிவிருத்தி விடயங்களுக்காக ;

(iii) பொருளாதார ரீதியில் கஷ்டப்படுகின்ற சிறுவர் சிறுமிகளுக்கு புலமைப் பரிசில் வழங்குதல் போன்ற வேலைத் திட்டத்துக்காக,

(ஈ) தூர பிரதேசத்தில் இன்னும் முன்னேற்றமடையாத நிலையில் உள்ள கிராமங்களுக்குச் சென்று கிராம வாசிகளின் அன்றாட தேவைகளை இனங்கண்டு பலதரப்பட்ட உபகார சேவைகளை மேற்கொள்ளல் ; மற்றும்

(எ) சாசனம் மற்றும் தேசியத்துக்கான அபாயங்களை இனங் கண்டு அவற்றை இல்லாதொழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கீழ்க்குறிப்பிடப்படும் செயற்பாடுகள், அதாவது :-

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும் காசாக அல்லது பொருளாக அல்லது மானியங்களாக அன்பளிப்புகளாக அல்லது நன்கொடைகளாக மற்றும் ஒப்பப் பணமாக பெற்றுக் கொள்வதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்கும் விற்பதற்கும் அல்லது வேறு வகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொகுதிக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும் பேணுவதற்கும் மாற்றுவதற்கும் ;

(இ) வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் பிணைப்பொறுப்புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபன விடயங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை 5 ஆவது பிரிவின்கீழ் உரிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்றுச் சபையின் மூலம் பொருத்தமானது எனக் கருதப்படுகின்ற முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) ஏதாவது ஒரு நபருடனோ அல்லது ஆட்கள் குழுவுடனோ உடன்படிக்கைகளை ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும் அல்லது பதவி விலக்குவதற்கும் அவர்களுடன் சேவைகளை முடிவுறுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களையும், படிகளையும், பணிக் கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துவதற்கும் ; மற்றும்

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை செயலுருவில் கொண்டு வருவதற்கு இடை நேர்விளைவான அல்லது அவசிமான விடயங்கள் அல்லது உசிதமான முறையில் செய்வதற்கும் கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரம் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், கட்டுப்பாடு நிருவாகம் ஆகியன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய பதவி தாங்குநர்களையும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்க தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட நிறைவேற்றுச் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் “பொறுப்புக் கூறும் சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது “பொறுப்புக் கூறும் சபை” இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் பொறுப்புக் கூறும் சபையாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது போஷகர் வணக்கத்துக்குரிய தல்லலே சன்தகித்தி தேரர் அவர்களாவர். மேற்கூறப்பட்ட (2) உபபிரிவின்படி அடிப்படையில் மன்றத்தின் “பொறுப்பு கூறும் சபையில் ஏனைய பதவி வகிக்கும் அங்கத்தவர்கள் கூட்டுத்தாபனத்தின் முதலாவது பொறுப்பு கூறும் சபையின் பதவி வகிப்பவர்கள் எனக் கருதப்பட வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும் ஒவ்வொரு வகுப்பினருமான உறுப்பினர்களினாற் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் அல்லது அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி நீங்குதல் ;

(ஆ) பொறுப்புக் கூறும் சபையில் தேர்ந்தெடுத்தல், பொறுப்புக் கூறும் சபையின் பதவி தாங்குநர்கள் தமது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது நீக்குதல் மற்றும் பொறுப்புக் கூறும் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் அத்துடன் சேவையாளர்களின் தத்துவங்கள், பணிகள், கடமைகள், சேவையிலிருந்து நீக்குதல், அவர்களின் சேவை முடிவுறுத்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக் கூறும் சபையினதும் அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் கூட்டத்தை கூட்டுவதில் பின்பற்ற வேண்டிய முறைகள் உட்பட கூட்டத்துக்கான அழைப்பு, நடாத்துதல் பற்றிய செயல்முறைகள் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் பொறுப்புக்கூறும் சபையினதும் உறுப்பினர்களுக்கான தகைமையும் தகைமையீனமும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் விடயங்களை முகாமைத்துவம் செய்தலும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைவதை கருத்தில் கொள்ளுதல்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவிலுள்ள மன்றத்தின் சாசன சட்டங்கள் இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத பட்சத்தில் கூட்டுத்தாபனத்தின் சட்டங்களாகக் கருதப்படுவதுடன் அந்த சட்டம் உருவாக்குவதைப் போன்றே அவ்வாறான கூட்டத்தில் அதே போன்று திருத்தியமைத்தல், மாற்றுதல், அதை ரத்துச் செய்தல் ஆகியவை செய்ய முடியுமானதாக இருக்கும்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

*மன்றத்தினால் மற்றும் மன்றத்துக்கு செலுத்தப்படவுள்ள கடன்கள்.*

**7**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தின் மூலம் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்திகதியன்று மன்றத்துக்கு வருமதியாக உள்ள கடன்கள், ஒப்பப்பணங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தல்.*

**8**. இச்சட்டத்தின் கீழும் மற்றும் சட்டங்களின்கீழ் கூட்டுத்தாபனத்தின் மூலம் கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கும் சகல அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தப்பட்ட எல்லா காசுகளும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு சட்டங்களின் அடிப்படையில் வகித்தல், பயன்படுத்தல் ஈடுபடுத்தல் வேண்டும். அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் சட்ட திட்டங்களின்கீழ் அவ்வாதனங்களை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் அகற்றுதல் என்பவற்றுக்கு பூரண அதிகாரம் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**9.**(அ) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்;

(ஆ) கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லா கொடுக்கல், வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் நிறைவேற்றுச் சபையின் மூலம் தோந்தெடுக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும் .

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது போஷகர் மற்றும் செயலாளர் அல்லது பொறுப்புக்கூறும் சபைமூலம் நிச்சயப்படுத்திய அடிப்படையில் வேறு இரு அங்கத்தவர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனி வேறானதாதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்துக்கு அவரினால் செலுத்தப்படற்பாலதான வருடாந்த உதவு தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் தொகையை கூட்டுத்தாபனத்தின் கடன் மற்றும் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரச சபை அல்லது கூட்டுத்தாபனம் அல்லது வேறு ஏதேனும் நபரினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும் அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்